இணைப்பு II

(477 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

மானியக் கோரிக்கை எண் 33–சட்டத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு, 2009–2010

முன்னுரை

நீதிமன்றங்களால் ஏற்பளிக்கப்பட்ட சட்டபூர்வமான உரிமைகளையும் சட்டபூர்வமான கடமைப் பொறுப்புகளையும் தீர்மானிப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள விதிகளின் தொகுப்பே பொதுவாக சட்டம் எனப்படுகிறது. சட்டமானது, படிப்படியாகவும் தொடர்ச்சியான வழிமுறைவாயிலாகவும் வளர்ந்த நிலையிலான சமூக அளவிலான பொறியியலாகவும் சமூக மாற்றத்தை ஏற்படுத்துகின்ற கருவியாகவும் இருக்கிறது. சட்டமானது சமூக மாற்றத்திற்கானக் கருவியாகவும், அதே நேரத்தில் சமூக மாற்றத்தைக் காக்கின்ற கருவியாகவும் இருக்கின்றது. அரசானது தேசிய வாழ்வின் நிறுவன அமைப்புக்கள் அனைத்திலும் சமுதாய, பொருளாதார, அரசியல் நீதி நிறைந்து நிலவுவதாக ஒரு சமுதாய முறை அமைவினைப் பயனுற எய்தி போற்றிப் பாதுகாத்து மக்களின் நல்வாழ்வை மேம்படுத்த பெரிதும் முயலுதல் வேண்டும். சமூக அளவில் சமமற்ற நிலையானது நிலவும் போதெல்லாம் அல்லது பொருளாதார அநீதி காணப்படும் போதெல்லாம் ஒரு மக்களாட்சி அரசு செயற்களத்திற்கு வந்து சட்டத்தின் துணையுடன் சமூகத்தில் சமநிலையை நிறுவி பொருளாதார அநீதியை அகற்றுகிறது. கொள்கையை உருவாக்குபவர்கள், சமுதாயத்தின் நிலைமைகளை எப்போதுமே கருத்திற்கொள்ள வேண்டியிருக்கும். அரசினால் எது செய்யப்பட்டாலும் அது மக்களின் நன்மைக்காகவே செய்யப்படுகிறது. நலவாழ்வும், முழு நலமும் நிறைந்த சமுதாயத்திற்கு தங்கு தடையற்ற தாராளமான சுற்றுச்சுழல் தேவையானதாகும். அங்கு மக்கள் இதமாக இயங்க முடியும். தமது ஆளுமையைப் பெருமளவில் உயர்த்திக் கொள்ள முடியும். ஒருவரது உயிரோ உடல் சார்ந்த உரிமையோ, சட்டம் விதித்துள்ள நெறிமுறைகளின்படியன்றி பறிக்கப்படுதல் ஆகாது. அரசானது ஒவ்வொரு குடிமகனும் வாழ்வதற்கான, அவரது உரிமையைப் போற்றிப் பேணி பாதுகாக்கும் கடமைப் பொறுப்பினைக்

கொண்டிருக்கிறது. முடங்கிக் கிடப்பது சட்டத்தின் இயல்பன்று, ஆற்றோட்டமென பாய்வதே அதன் இயல்பாகும். சட்டமானது தேங்கிக் கிடக்க இயலாது. அது அசையாது நிற்காது தொடர்ந்து அடுத்தடுத்த நிலைகளை நோக்கி நகர்ந்து கொண்டே இருக்கும்.

இந்த அரசின் சட்டத் துறையானது, சமுதாய நலனிற்கான அரசின் கொள்கைகளைச் செயற்படுத்துவதற்காக மேற்சொன்ன கொள்கைகளைக் கவனத்திற்கொண்டு பல்வேறு சட்டங்களை இயற்றுகிறது.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக சட்டங்கள் தேவைப்படும்போது, சட்டத் துறை, தொடர்புடைய துறையுடன் ஒருங்கிணைந்து அக்கொள்கைகளுக்குச் சட்ட வடிவமளித்து சட்டமுன் வடிவுகளை உருவாக்குகிறது.

சட்டப் பேரவை சட்ட வரைவிற்கு ஒப்புதல் அளித்த பின்னர், ஆளுநரின் அல்லது குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்றபின் அது சட்டமாகும் வரையில் சட்டத் துறையின் பணி தொடர்கிறது. சட்டப் பேரவை ஒத்திவைக்கப்பட்டு, அமர்வில் இல்லாத காலங்களிலும் அரசமைப்பின் 213-ஆவது உறுப்பின்படி அவசரச் சட்டம் வாயிலாக சட்டங்களை அவசரத் தேவைக்கேற்ப உருவாக்குகிறது. சட்டத் துறையின் பணி அவசரச் சட்டத்திற்கான முன்வரைவுகளை அதன் நோக்கத்திற்கேற்ப தயாரித்து அதைப் பிரகடனப்படுத்தும் வரையில் தொடர்கிறது.

மேலும் சட்டத் துறையின் முக்கிய பணியானது, சட்ட மன்றப் பேரவைச் செயலகம் உட்பட, தலைமைச் செயலகத்தின் அனைத்துத் துறைகளுக்கும் சட்டப் பிரச்சனை தொடர்பாக ஆலோசனை வழங்குவதாகும்.

இவை தவிர சட்ட விதிகள், அறிவிக்கைகள், ஆணைகள் மற்றும் மாநில அரசு ஒரு தரப்பினராக இருக்கிற ஆவணங்கள் ஆகியவற்றையும் அவற்றின் சட்ட வகைமுறைகள் தொடர்பாகவும் சட்டத் துறை கூர்ந்தாய்வு செய்து அறுதி செய்கிறது.

மாநில அரசு தரப்பினராக உள்ள அனைத்து வழக்குகளிலும், உறுதிமொழி ஆவணங்களின் வரைவும், எதிர் உறுதி மொழி ஆவணங்களின் வரைவும், அவற்றிற்கான வரைவு மறுமொழிகளும்

2009 ஜூலை 1]

சட்டத் துறையால் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு அறுதி செய்யப்படுகின்றன.

மேலும், பின்வருவன தொடர்பான நிர்வாகப் பணிகளையும் சட்டத் துறை செய்து வருகிறது:—

(1) சட்டக் கல்வி.

(2) சான்றுறுதி அலுவலர்கள்.

(3) மாநில ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு.

(4) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்.

சட்டக் கல்வி

சட்டக் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் சட்டக் கல்வித் துறையானது 1953 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தொடர்ந்து பணியாற்றி வருகிறது. இத்துறை தோற்றுவிக்கப்பட்ட பிறகு, தமிழ்நாட்டில் சட்டக் கல்வியின் தரம் அனைத்து வகைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளதோடு, மென்மேலும் முன்னேற்றமடைய இத்துறை தொடர்ந்து செயற்பட்டு வருகிறது.

சென்னை டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி 1891 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மதுரையில் ஒரு சட்டக் கல்லூரி 1974 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1979-80 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளியில் ஒன்றும், கோயமுத்தூரில் ஒன்றுமாக இரு அரசு சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996-97 ஆம் கல்வியாண்டில் திருநெல்வேலியில் ஒரு அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. 2006-2007 ஆம் கல்வியாண்டில் தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகத்தால் செங்கல்பட்டில் நடத்தப்பட்டு வந்த சட்டக் கல்லூரியை அரசு சட்டக் கல்லூரியாக அறிவித்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2008-2009 ஆம் ஆண்டு முதல் வேலூரில் ஓர் அரசு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது. தற்போது தமிழ்நாட்டில் ஏழு அரசு சட்டக் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன.

2009-10 ஆம் கல்வியாண்டில் அரசுச் சட்டக் கல்லூரிகளில் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளன.

[2009 ஜுலை 1

சட்டக் கல்லூரியின் பெயர்	மொத்தம் ஒப்பளிக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை
டாக்டர் அம்பேத்கர் அரசு சட்டக் கல்லூரி, சென்னை. (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	*2,126*
அரசு சட்டக் கல்லூரி, மதுரை (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	*1,428*
அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	*1,430*
அரசு சட்டக் கல்லூரி, கோயம்புத்தூர் (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	*1,430*
அரசு சட்டக் கல்லூரி, திருநெல்வேலி (இளநிலை மற்றும் முதுநிலை சட்டப் படிப்புகள்)	*1,430*
அரசு சட்டக் கல்லூரி, செங்கல்பட்டு (இளநிலை சட்டப் படிப்பு மட்டும்)	*1,040*
அரசு சட்டக் கல்லூரி, வேலூர் (இளநிலை சட்டப் படிப்பு மட்டும்) (மூன்றாண்டு சட்டப் படிப்பு மட்டும்)	*80*

வேலூர் அரசு சட்டக் கல்லூரியைத் தவிர, இதர அரசு சட்டக் கல்லூரிகள் அனைத்தும் சொந்தக் கட்டடங்களில் செயற்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை ஆகிய அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்கும், மாணவியர்களுக்கும் தனித் தனி விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் மாணவர்களுக்கும், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் மாணவியர்களுக்கும் விடுதி வசதி செய்து தரப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் அரசு சட்டக் கல்லூரியில் பயிலுகின்ற மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டப்பட்டு பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது. திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளில் பயிலுகின்ற மாணவர்களுக்கான விடுதிக் கட்டடங்கள் கட்டிட,

2009 ஜூலை 1]

முறையே அபிஷேகபுரம் மற்றும் குலவணிகர்புரம் கிராமங்களில் நிலங்கள் ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் சட்டத்தைத் தமிழில் பயிலுவதற்கேதுவாக, தமிழில் சட்டப் புத்தகங்களை வெளியிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பாடத் திட்டத்திலுள்ள அனைத்து சட்டப் பாடங்களுக்கும் தமிழில் புத்தகங்கள் எழுதி முடிக்கப்பட்டு, மொத்தம் 32 பாடங்களுள் 27 பாடங்களுக்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தால் தமிழில் புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ரூபாய் 80 இலட்சம் செலவில் செங்கல்பட்டு அரசு சட்டக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ரூபாய் 76 இலட்சம் செலவில் மதுரை அரசு சட்டக் கல்லூரியில் 4 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கழிப்பறை வசதிகளுடன் கட்ட அனுமதிக்கப்படவுள்ளது.

சான்றுறுதி அலுவலர்கள்

1952 ஆம் ஆண்டு சான்றுறுதி அலுவலர்கள் சட்டத்தின்படி முறையாவணங்களைச் சான்றொப்பமிடும் நோக்கத்திற்காகவும் மற்றும் சான்றுறுதி அலுவலரின் ஏற்பளிக்கப்பட்ட செயல்களுக்காகவும் சான்றுறுதி அலுவலர் அமர்த்தப்படுவர். 1-1-2009 அன்று உள்ளபடி இந்த அரசால் சான்றுறுதி அலுவலர்களாக அமர்த்தப்பட்டு இம்மாநிலத்தில் செயல்படுபவர்களின் எண்ணிக்கை 1,625 ஆகும்.

மாநில ஆட்சி மொழி (சட்டப்) பிரிவு

1965 ஆம் ஆண்டு முதன்முதலாக மாநில சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டச் சொற்களை அறுதி செய்து சட்டச் சொல் அகராதி வெளியிடுவதற்காகவும், மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்படி செய்யப்படும் விதிகள் மற்றும் அறிவிக்கைகள் ஆகிய அனைத்தையும் தமிழில் மொழி பெயர்ப்பதற்காகவும், அரசால் அவ்வப்போது ஒப்படைக்கப்படலாகும் பிற பணி எதனையும் மேற்கொள்வதற்காகவும் அமைக்கப்பட்டது.

2. மாநிலச் சட்ட ஆட்சி மொழி ஆணையம், சட்டத் துறைச் செயலாளரின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும்

[2009 ஜூலை 1

கட்டுப்பாட்டின்கீழும், சட்டத் துறை கூடுதல் செயலாளரின் தலைமையிலும், சட்டத் துறையின் ஒரு பிரிவாக *1992* ஆம் ஆண்டு சட்டத் துறையுடன் சேர்க்கப்பட்டது. இது மையச் சட்டங்களையும், மாநிலச் சட்டங்களையும் மொழி பெயர்த்து வருகிறது. மையச் சட்டங்களை மொழி பெயர்த்து புத்தக வடிவில் அச்சிடுவதற்கானச் செலவினை, மைய அரசு ஏற்றுக் கொள்கிறது. மாநிலச் சட்டங்களை மொழிபெயர்த்து அச்சிடும் செலவினை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம்

சென்னையிலுள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகமானது தமிழ்நாடு மாநிலத்தில் உயரிய சட்டக் கல்வியை வழங்குவது மற்றும் சட்ட அறிவைப் பரப்புவது என்பதான குறிக்கோளுடன் இம்மாநிலத்தில் அமைத்துருவாக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகம் *1997* ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் *20* ஆம் நாளன்று அப்போதைய மேதகு குடியரசு தலைவர் திரு. கே.ஆர். நாராயணன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகமானது *3-10-1997* அன்று முதல் செயல்படத் தொடங்கியது. தெற்காசிய நாடுகளில் சட்டக் கல்விக்கென தோற்றுவிக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகமாக இது திகழ்கின்றது. தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சட்டக் கல்லூரிகளையும் தன்னகத்தே ஒருங்கிணைத்து செயல்பட்டு வருவதால் சட்டக் கல்வியின் தரம் மேம்பட்டு வருகிறது.

சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி, செங்கல்பட்டு மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் செயல்படும் ஏழு அரசு சட்டக் கல்லூரிகளும் மற்றும் சேலத்தில் செயல்படும் ஒரு தனியார் சட்டக் கல்லூரியும் இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

2007-2008 ஆம் கல்வியாண்டு முதல் தமிழ்நாட்டில் அனைத்து சட்டக் கல்லூரிகளிலும், முதன்முதலாக நுழைவுத் தேர்வற்ற சட்டப் பட்டப் படிப்பு மாணவர் சேர்க்கை வெற்றிகரமாக நடந்தேறியது. இதன்மூலம் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களிடையே நிலவி வந்த இடைவெளியும் இன்னலும் நீக்கப்பட்டு, மேல்நிலை கல்வியில் பெற்ற மதிப்பெண்களை மட்டுமே மையமாக வைத்து மாணவர் சேர்க்கை சிரமமின்றி நடந்தது.

2009 ஜுலை 1]

1956 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக் குழு சட்டத்தின் *12* பி பிரிவின் படி மைய அரசின் உதவியைப் பெறுவதற்கு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகமானது தகுதியுடையதென *2008* மே திங்கள் *5* ஆம் நாளன்று விளம்பப்பட்டுள்ளது. இப்பல்கலைக்கழகமானது திட்டக் குழு, கட்டடக்குழு, நிதிக் குழு, ஆட்சிக் குழு ஆகியவற்றால் பரிந்துரை செய்யப்பட்டவாறு *2008* ஜுன் திங்களின்போது ரூ.*100* கோடி என்ற அளவிற்கு பல்கலைக்கழக மானியக் குழுவிற்கு XI ஆம் திட்டக் கருத்துருக்களைப் பணிந்தனுப்பியுள்ளது.

அடிப்படையில் பாடத் துறைகளுக்கிடையே உள்ள படிப்புகள் என்ற இயல்பினதான, சட்டக் கல்வியில் எழுகின்ற களங்களை நல்ல முறையில் புரிந்து கொள்வதற்காக அறிவியல், மருத்துவம், தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகளைச் சேர்த்து அவற்றை சட்டத்துடன் இணைக்கும் வகையில், சட்டப் பல்கலைக்கழகமானது *2008-2009* ஆம் கல்வியாண்டு முதற்கொண்டு இந்நாட்டிலேயே இந்த முயற்சியில் முதலாவது என்ற வகையில் இந்திய வழக்குரைஞர் கழகத்தினால் ஏற்பளிக்கப்பட்டுள்ளவாறு மூன்றாண்டு (ஹானர்ஸ்) பட்டப் படிப்பில் - பாடத் துறையிடைப் படிப்புகள் - என்ற வகையில் - மருத்துவ-தொழில்நுட்ப சட்டப் படிப்புகள் என்பதான புதிய பாடத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழக மானியக் குழுவின் அறிவுறுத்தலின்படி, சட்டப் பல்கலைக்கழகத்திலும், அதனுடன் இணைக்கப்பட்டுள்ள சட்டக் கல்லூரிகளிலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை, அவர் தம் ஜாதி மற்றும் பாலினம் குறித்த விவரங்கள், பணியாளர் விவரங்கள் முதலான அவ்வப்போது கிடைக்கும் வகையில் தகவல்களைத் தொகுப்பதற்கு சட்டப் பல்கலைக்கழகத்தில் ஒரு புள்ளியியல் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் புள்ளியியல் பிரிவிற்கு ஒரு பேராசிரியர் ஒருங்கிணைப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சட்டப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள சட்டக் கல்லூரிகளில் உள்ள நாட்டு நலப் பணித் திட்டத்தைச் சார்ந்த தன்னார்வ மாணவர்கள் பின்வரும் முறையான செயற்பாடுகளில், அதாவது இரத்த தான முகாம்கள், இலவச கண் சிகிச்சை முகாம்,

[2009 ஜூலை 1

மரக் கன்றுகள் நடுதல் வளாகத்தின் சுற்றுப்புறத் தூய்மையைப் பாதுகாத்தல், சட்ட விழிப்புணர்வுத் திட்டங்கள், வாழ்க்கைப் பணி முன்னேற்றத்திற்கான வழிகாட்டுதல் திட்டங்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகமானது 2008-2009 ஆம் கல்வி ஆண்டின்போது தேசிய மாணவர் படையைத் தொடங்கியது. சீர்மிகு சட்டப் பள்ளியிலிருந்து 50 மாணவர்கள் தேசிய மாணவர் படையில் சேர்ந்துள்ளனர்.

இந்தக் கல்வியாண்டு முதற்கொண்டு தொலைதூரக் கல்வி வாயிலாக கணினிச் சட்டங்களில் முதுநிலைப் பட்டயப் படிப்பு ஒன்றை வழங்குவதற்காக இப்பல்கலைக்கழகமானது புதுதில்லியில் உள்ள இந்திராகாந்தி திறந்தவெளிப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இப்பல்கலைக்கழகமானது மாலை நேரக் கல்லூரியில் பயிலும் வகையில் நுகர்வோர் சட்டக் கல்வி என்பதான முதுநிலை பட்டயப் படிப்புப் பிரிவு ஒன்றினை அறிமுகம் செய்துள்ளது.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடத்தைக் கட்டுவதற்காக ரூ.76 இலட்சம் என்ற அளவில் தொகை ஒப்பளிக்கப்பட்டுள்ளது. தற்போது மேற்சொன்ன கட்டடமானது கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

2009–2010 ஆம் ஆண்டுகளுக்கான பகுதி–II திட்டப் பணிகளுக்கான விவரப் பட்டியல்

(ரூபாய் இலட்சத்தில்)

வ. எண்	திட்டப் பணிகளின் விவரம்	இறுதி நிலைச் செலவு			2009–2010–ல் செலவு			
		தொடர் செலவு	தொடரா செலவு	மொத்தம்	வருவாய்க் கணக்கில் செலவு	மூலதனக் கணக்கில் செலவு	கடன் கணக்கில் செலவு	மொத்தம்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
1.	அரசு சட்டக் கல்லூரிகளுக்குப் புத்தகங்கள் வாங்குதல்	–	14.00	14.00	14.00	–	–	14.00

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)
2.	மதுரை அரசு சட்டக் கல்லூரியில் நான்கு கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கழிப்பறை வசதிகளுடன் கட்டுதல்.	–	76.00	76.00	–	76.00	–	76.00
3.	தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைகழகத்தில் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள 3 வருட சட்டப் படிப்பிற்கும் மற்றும் ஏற்கெனவே உள்ள பட்ட மேற்படிப்பு மற்றும் ஆராய்ச்சித் துறைக்கும் தேவையான புத்தகங்கள் வாங்குதல்.	–	10.00	10.00	10.00	–	–	10.00
	மொத்தம்	–	100.00	100.00	24.00	76.00	–	100.00